
11:34 4G 3.00 KB/S Vo LTE 9 67

# தொகுதி. 2 எண். 2 (2022): களஞ்சியம் ஆகஸ்ட் 2022 இதழ்




களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்வு இதழ், ஆகஸ்ட் 2022 இதழ்

வெளியிடப்பட்டது: 18-08-2022

## கட்டுரைகள்

### பாண்டியர்களின் ஆளுமை

பாண்டியர்களின் ஆளுமை

முனைவர்

7

PDF

Kalanjiyam – kala...
https://ngmtamil.in

களஞ்சியம் KALANJIYAM
International Journal of Tamil Studies

KALANJIYAM – International Journal of Tamil Studies | An International Open Access, Peer-reviewed, Refereed Journal | ISSN: 2456-5148 | Impact factor 7.95 Calculate by Google and Semantic Scholar | | ESTD Year : 2014 | Email: editor@ngmtamil.in

களஞ்சியம் (Kalanjiyam) – An International Journal of Tamil Studies is a quarterly, bi-lingual journal in Tamil and English that publishes research articles, book reviews and new manuscripts relating to Tamil classical and modern literature, grammar, folklore and translation.

ISSN : 2456-5148 – Check Status

Publication Process
Follow this Step and Publish Your Research Paper within 1 to 2 day

PEOPLE ALSO VIEW

# பாண்டியர்களின் ஆளுமை

முனைவர் ந.ஜெயசுதா
தமிழ் உதவிப் பேராசிரியர்,
ந.க.ம.கல்லூரி,பொள்ளாச்சி

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்திய தீபகற்பத்தின் தென் பகுதியில் அமையப்பெற்ற தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர்களுள் ஒருவர் பாண்டியர்கள். மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பாண்டிய மன்னர்கள் தமிழுக்கு அரும் தொண்டு ஆற்றியுள்ளனர். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் முதற்சங்கம,; இடைச்சங்கம,; கடைச்சங்கம் என்று அமைத்து தமிழை வளர்த்த பெருமையுடையவர்கள் பாண்டியர்கள். இத்தகு சிறப்பு வாய்ந்த பாண்டியர்களின் ஆளுமையை புறப்பாடல் கொண்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**பாண்டியர்களின் தொன்மை:**

தமிழகத்தைப்பல நூற்றாண்டுகளாக ஆண்டுவந்த சேர, சோழ,பாண்டியர்களுள் சங்கம் வைத்து தழிழாராய்ந்த பெருமையுடையவர்கள் பாண்டியவரேயாவார். இப்பாண்டியர்கள் தொன்மையானவர்கள் என்று சங்கங்களைப் பற்றி விரிவான விளக்கத்தைக் கூறும் இறையனார் அகப்பொருள் உரை எடுத்துக் கூறுகின்றது. இதற்குத் தகுந்தவாறு, பண்டு என்பதன் அடியாகப் பிறந்ததே பாண்டியர் என்ற சொல் பழமையானவர் என்ற பொருளைத் தருகின்றது.

'முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே" என்று தேசியக்கக்கவி பாடிய பெருமைக்குரியது பாண்டியநாடு. இப்போதுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள்அடங்கிய நிலப்பகுதியே சங்ககாலப் பாண்டியநாடு என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

'முந்நீர் விழவின் நெடியோன்

நன்னீர் பஃறுளி மணலினும் பலவே" (புறம் 9)

என்ற அடிகள் கொண்டு தென்பகுதியை ஆண்டவன் பாண்டியன் என்பதும் இதுவே பழம் பாண்டியநாடு எனவும் அறியமுடிகின்றது.

**முச்சங்கம் வளர்த்தவன்:**

முச்சங்கமும் பாண்டியர்கள் வளர்த்தனர் என்பதை பேரிசைச்சூத்திரம் என்ற திரட்டில்,

'மோனையாந் தெய்வத் தமிழ்மொழி நிறீஇய

சங்கத் தலைவர்கள் தலைமை பூண்டங்

கறம் வளரவையில் அரங்கேறிய நாள்

வழுதியர் வள்த்தது சங்ககாலம்"

(ஞா.தேவநேயப்பாவாணர்.த.இ.வ.ப.63)

என்ற இவ்வரிகளின் மூலம் பாண்டியர்கள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்துள்ளதை அறியமுடிகின்றது.

**சிறப்புப் பெயர்கள்:**

தமிழகத்திலுள்ள தென்னாட்டை ஆண்ட பாண்டிய மன்னர்களுக்கு தென்னவன், மாறன், செழியன், வழுதி என்ற சிறப்புப்பெயர்களாக. அடுபோர்ச்செழியன், வென்வேற்செழிய, ஓங்கு வாள் மாற, பெரும் பெயர் வழதி, விறல் மான் குடுமி என்றவாறான சிறப்புப் பெயர்களைப் பெற்றுள்ளனர் என்பதை இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. மேலும், "மீன் பாண்டியர்களின் இலச்சினையாகும் என்பதற்கு, பாண்டியர் கொடியில் மீன் உருவமே தீட்டப்பட்டிருப்பது சான்றாகின்றது.. கொற்கைத் துறைமுகத்தில் ஏற்றுமதியான பண்டகப் பொதிகள் மீதும் இறக்குமதியான பண்டகப் பொதிகள் மீதம் மீன் இலச்சினையே இடப்பட்டது. அரசாங்க ஆணைகள் மீதும் மீன் பொறியே பொறிக்கப்பட்டது. இதனால் பாண்டியனுக்கு மீனவன், மீனக்கொடியோன் என்னும் பெயர்களும் வழங்கின என்று தமிழ்ப்பண்பாண்டு வரலாறு ப.60 என்னும் நூலில் மா.இராசமாணிக்கனார் குறிப்பிடுவதன் மூலமும் அறியமுடிகின்றது.

பாண்டிய நாட்டின் தலைநகரம்:

பாண்டிய நாட்டின் தலைநகரம் மதுரை என்பதை,

"இமிழ் குரல் முரசம் மூன்றுடன் ஆளும்

தமிழ் கெழு கூடல்தண்கோல்வேந்தே"(புறம்58)

என்ற புறப்பாடல் கொண்டு அறியலாம். மேலும் 'இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கும் மேலாகச் சற்றும் இடைவெளியில்லாத தொன்மையும் வரலாற்றுப் பெருமையும் கொண்டது மதுரை மாநகர். பாண்டியர்களின் தரைநகராகப்பதினான்கு நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக விளங்கியது. 15முதல் 18ஆம் நூற்றாண்டுகள் வரை பாண்டிய நாடடை ஆண்ட முஸ்லீம், சுல்தான், நாயக்க மன்னர்கள் ஆகியோரின் தலைநகரமாகத் தொடர்ந்து விளங்கியது. 18 நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக ஒருநாட்டின் தலைநகரமாகத் தொடர்ந்து விளங்கிய பெருமை இந்தியாவில்மதுரை நகருக்கு மட்டுமேயுண்டு. கி.மு. 300 இல்இருந்ததாகக்கூறப்படு;ம் கிரேக்க அறிஞர் மெகஸ்தனிஸ் மதுரையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.கி.பி.75 ஆம்ஆண்டில்கிரேக்க அறிஞரான பிளினி தனது குறிப்பில்மதுரையைப் பற்றி எழுதியுள்ளார்.கி.பி.140இல் வாழ்ந்த தாலமியன்குறிப்பில் மதுரை இடம் பெற்றுள்ளது. கி.மு.25 இல் ஆண்ட ரோம்

பேரரசனான அகஸ்டஸ் சபைக்கு மதுரைப் பேரரசனின ;தூதுவன் ஒருவன் வந்தான் என ஸ்ட்ராபோ என்பவர் குறிப்பிடுகிறார். கி.பி.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகப் பழமையான கல்வெட்டுகள் மதுரைக்கு அடுத்த திருப்பரங்குன்றம் ,அழகர்மலை, சித்தர்மலை ஆகிய இடங்களில் உள்ளன." (இரா.வள்ளி மணவாளன், குமரித் தமிழ்கோப்பு, ப.86) என்ற கூற்றின் மூலம் பல சு}ற்றர்டுகள் பெரும்புகழ் பெற்ற மாநகரமாக மதுரை விளங்கியதை பல அறிஞர்களின் கூற்றுக்களை ஒரே நூலில் குறிக்கப்பட்ட குறிப்புக்களின் மூலம் மதுரை மாநகர் சிறப்பானது என நிறுவமுடிகின்றது.

தென் தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்"(மணிமேகலை)

என்ற பாடல் வரியால் தெற்குத்திசையில்மதுரையுள்ளது என்பதையும் தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கே உரியது என்பது புலனாகிறது.

இச்சிறப்பான மதுரை மாநகர்பாண்டியர்களால் ஆளப்பட்டு வளமான நகரமாக இருந்துள்ளது.வளம்மிகுந்திருப்பதை அங்குள்ள வணிகத்தெருக்களும், பலவிதமான கடைகளும்சான்றாகின்றன.

இலங்குகொடி யெடுக்கும் நலங்கிளர் வீதியும்
நூலினும் மயிரினும் நுழைநூற்பட்டினும்
பால்வகை தெரியாப்பன்னூறடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்
..............................................................
கூலங்குவிந்த கூல வீதியும்
பால்வேறு தெரிந்த நால்வேறு (சிலம்பு14: 204-217)

என்ற வரிகளின் மூலம்மதுரை நகரில் பல தெருக்களில் பொற்கடைத்தெரு, புடவைத்தெரு, கூலக்கடைத்தெரு, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் இருக்கக்கூடிய நான்கு தெருக்கள், கோயில்கடைத்தெருக்கள் போன்றவை இருந்திருக்கின்றன. இவையெல்லாம் பாண்டியர்களின் வளத்தை மையமிட்டுக்கொண்டே செல்பவையாகும்.

**துறைமுகம்:**

பாண்டியர்களின் துறைமுகம் கொற்கையாகும். கொற்கை பொருநையாற்றின் கரையில் உள்ள ஊராகும். பொருநையாறு பொதிகை மலையில் தோன்றுகிறது. பொருநையாறு இன்று கடலோடு கலக்கும் இடத்திற்கு நான்கு கல் உள் தள்ளி வடகரையில் கொற்கை என்ற சிற்றூர் ஒன்று உள்ளது என்பார்கள். இந்த கொற்கைக்குத் தலைவன் பாண்டியன் என்பதை,

பேர் இசைக் கொற்கைப் பொருநன்வென்வேல்

கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச்செழியன்(அகம்296)

என்ற அடிகள் விளக்குகின்றன.

இத்துறைமுகத்தில் முத்துக்கள் நிறைந்துள்ளன என்பதை, "முத்துப்படு பரப்பின கொற்கை முன்துறை" (நற்றிணை23) என்ற அடியிலும்,

"சீருடைய விழுச் சிறப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்
இலங்கு வளை இருஞ்சேரி
கட்கொண்டிக் குடிப் பாக்கத்து

நற்கொற்கையோர் நசைப்பொருந" (மதுரைக் காஞ்சி.131-135)

என்ற அடியில் சிறந்த முத்துக்களையும் சங்கினையும் முழ்கி எடுப்பவர் வாழ்கின்ற ஊர். கள்ளாகிய உணவை உண்ணும் குடிகள் தங்கியுள்ள சிற்றூர்களையும் கொண்டது கொற்கை என்னும் ஊர். இவ்வூரே துறைமுகமாகவும் விளங்குகின்றது. முத்துக்கள் ஏற்றுமதியும் செய்துள்ளனர் என்பதையும் அறிமுடிகின்றது. இவ்வூரினர் விரும்பத்தக்க தலைவன் பாண்டின் நெடுஞ்செழியன் என்பதை அறியமுடிகின்றது.

**நாட்டு வளம்:**

பாண்டியநாடு வளமைக்கு வைகை நதியும், பஃறுளியாறும் காரணமாக அமைகின்றது.மேலும் கடல் சார்ந்த பகுதியென்பதால் துறைமுகத்தில் முத்துக்கள் மிகுந்து வளமுடையநாடாகக் காணப்படுகிறது.

முந்நீர் விழவின் நெடியோன்

நல்நீர்ப் பஃறுளி மணலினும் பலவே(புறம்9: 9,10)

பாண்டியனின் தென்பகுதியில் அமைந்துள்ள குமரி நாட்டில் பஃறுளியாறு வளமூட்டியதையும்,

வைகைக்குச் சான்றாக,

மாட மறுகின் மருவி மறுகுற

கூடல் விழையும் தகைத்து-தகை வையை(பரிபாடல் 20: 25,26)

ஏன்ற வரிகள் வைகை நதி மதுரை நகரின் தெருக்களிளெல்லாம் ஓடி வளமூட்டியுள்ளதை அறியமுடிகின்றது.மேலும்

புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி

வையையென்ற பொய்யாக் குலக்கொடி (சிலம்பு 13)

என்ற அடிகளின் மூலம் வைகை நதி பருவந்தோறும் பொய்க்காது மதுரையை வளப்படுத்துவதால் பாண்டியர்களின் குலக்கொடியாக வைகை உள்ளதை அறியலாம்.அன்று வற்றாது ஓடிய வைகை நீர் இன்று அணைகட்டி மதுரை மாவட்டத்தில் பாசனத்திற்குப் பயன்படுத்துகின்றனர்.

**பாண்டியர்களின் வாணிகம்:**

பாண்டியர்கள் கடல் வாணிகம் செய்துள்ளனர் என்பதற்கு யவனர்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

யவனர் நன்கலம் தந்த தண் கமழ் தேறல்

பொன் செய் புனை கலத்து ஏந்தி நாளும்

ஒண் தொடி மகளிர் மடுப்ப, மகிழ் சிறந்து(சிறுபாண்:56: 18-20)

யவனர்கள் நிறைய மதுபாணங்களை பாண்டிய நாட்டில் இறக்குமதி செய்துள்ளார்கள் என்பதையும் பொன்னாலான கலத்தில் மதுவை ஊற்றி பெண்கள் மன்னனுக்கு தருகின்றனர் என்ற செய்தியும், மேலும் , கோவை வேடப்பட்டி குளத்தில் சுத்தம் செய்யும் பணியின் போது பாண்டியர்கள் ரோமானியர்களுடன் வணிக தொடர்பை விளக்கும் பழங்காலத்தை சேர்ந்த 2 கற்தூண்கள் கண்டெடுத்துள்ளனர்; என்பதை தினத்தந்தி நாளிதழின் வழி அறியலாம்.

பாண்டியர் - ரோமானியர் வாணிகத்தொடர்பை விளக்கும் புகைப்படம்



5அடி உயரமும் உள்ள 2 தூண்களும்பேருர் குளத்தினன் நீர் திறப்புக்கான மதகு போன்று நிறுத்தப்பட்டுள்ளன.இதனால் அவை குளத்தில் இருந்து நீர் திறப்பதற்கு பயன்படுத்தப்பட்டு இருக்கும். எங்குமே இல்லாத வகையில் ஒரு

கல்லில் ஒட்டகத்தின் உருவ அமைப்பும் ரோமானியர்கள் பயன்படுத்திய ஆண்டனோ வகை கத்தியன் வடிவமும் புடைப்புச்சிற்பமாக பொறிக்கப்பட்டு உள்ளன.ஒட்டகத்தின் உருவம் ரோமானியர்களின் காலகட்டத்தை தெளிவாகக்காட்டுகிறது. மதகின் மற்றொரு தூணில் பாண்டியர்கள் ஆட்சியை விளக்கும் வகையில் மீன் உருவ அமைப்பும், செங்கோல் வடிவமும் புடைப்புச்சிற்பமாகப் பொறிக்கப்பட்டுள்ளன இதன்மூலம் கொங்கு நாட்டில் பாண்டியர்கள் ஆளமை இருந்ததையும், பல நாட்டினருடன் வணிகத் தொடர்பு இருந்துள்ளதையும் அறியமுடிகின்றது.

புகழுடையவன்:

பாண்டிய மன்னன் புகழுக்குரிய சிறப்பு வாய்ந்தவன் என்பதற்கு இறைவன் சிவன்,பலதேவர், திருமால்,மற்றும் முருகன் நால்வரோடு ஒப்புமையுடையவன் என,

"கூற்று ஒத்தீயே, வாலியோனை

புகழி ஒத்தீயே,இகழுநர் அடுநனை

முருகு ஒத்தீயே. முன்னியது முடித்தலின்

ஆங்கு ஆங்கு அவர் அவர் ஒத்தலின் யாங்கும்

என்ற பாடல் வரிகளில் பாண்டிய மன்னன் கோபம் என்ற குணத்தில் சிவனையும் வலிமையால் வெண்மையான நிறத்தையுடைய பலதேவனையும் பகைவரைக் கொல்லும் புகழுடைய திருமாலையும் அழகில் மயில்கொடியையும் யானையை ஊர்தியாகக் கொண்ட முருகப் பெருமானையும் ஒத்து விளங்குபவன் பாண்டிய மன்னன் என்று ஒப்பிடப்படுகிறது. இதனால் பாண்டியன் புகழுக்குரிய சிறப்பு வாய்ந்தவன் என்பதை அறியலாம்.

**வெற்றிச்சிறப்பு**

பாண்டியமன்னன் தலையானங்கானம் என்னும் இடத்தில் சேர சோழர்களாகிய இருபெருவேந்தரும் திதியன,; எழினி,எருமையூரன, இருங்கோ, வேண்மான், பொருநன் ஆகிய ஐந்து பெரும வேளிர்களும் பாண்டிய நெடுஞ்செழியன் மீது படையெடுத்து வந்துள்ளனர். அவாஸகளை பாண்டியன் வெற்றி பெற்ற காரணத்தினால் இவன் பெயர் தலையாலனங்கானத்து செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் எனப் பெயர் பெற்றுள்ளான். இப்போரில் ஏழுபெரும் மன்னர்களை ஒருவனாக எதித்து நின்று வெற்றிபெற்ற

இப் பாண்டியனைக் காலனைப் போன்றவன் என்று குறிப்பிடுகின்றா கல்லாடனார்

"ஞாலம் நெளிய ஈண்டிய வியன் படை

ஆலங்கானத்து அமர் கடந்து அட்ட

கால முன்ப" (மேலது. 23 15-17)

என்ற அடிகள் தலையானங்கானத்தில் பாண்டியன் உட்பட அனைத்து படையும் ஓரிடத்தில் கூடியதனால் உலகமே நெளியும் படியாக அமைந்தது என்கிறார். இங்கு இவர்களையெல்லாம் வென்ற செயல் யமனை ஒத்தது என்று கூறுவதன் மூலம் பாண்டியன் யமன் போன்ற வலிமையையுடையவன் என்பதை அறியமுடிகின்றது.

பாண்டியர்களின் சிறந்த ஆட்சியால் தென்னாடு சிறந்ததும் வளமான நீரும் வளமையான ஆட்சியால் வணிகத்தொடர்பும், நல்லதொரு தலைநகரும் துறைமுகமும் பெற்று, போரில் வெற்றியும் கண்ட பாண்டிய வேந்தன் பன்னாடும் போற்றும் ஆளுமையைப் பெற்றுள்ளான்.

பார்வை நூல்கள்:


1. புறநானூறு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர். சென்னை-600 098.

2. சிலப்பதிகாரம்
S.கலியாணசுந்தரையரால்
சென்னை, கபீர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றன.
ஐந்தாம் பதிப்பு

3. பரிபாடல்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர். சென்னை-600 098.

4. சிறுபாணாற்றுப்படை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர். சென்னை-600 098.

5. தினத்தந்தி நாளிதழ்